# வான் புகழ் வள்ளுவமும் வணிக நிர்வாகமும்–ஓர் ஒப்பாய்வு

***கவிஞர் முனைவர் ர. சக்திவேல்***
வணிகவியல் துறை
திரு கொளஞ்சியப்பர் அரசு கலைக்கல்லூரி
விருத்தாசலம்

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2022**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5049

## முன்னுரை

வணிக நிர்வாக இயலில் மேலாண்மைக்கும் மற்றும் நிர்வாகம் என்ற இரு கருத்துகளுக்கும் பொருள் மேலோட்டமாகப் பார்த்தால் ஒரேமாதிரியும், சற்றே ஒப்பிட்டு ஆழ்ந்து பார்த்து அறிந்தால் வித்தியாசங்கள் உள்ளதாகவுமே தெரிகிறது. நிபுணர்களின் கருத்துகளுடன் பார்த்தால் இரண்டிற்கும் என்ன வேறுபாடுகளுள்ளன என்பதை குறிப்பிட்டு உணரமுடியும்.

**நிர்வாகம் - மேலாண்மை இவற்றிற்கிடையே உள்ள வேறுபாடுகள்**

| | நிர்வாகம் | மேலாண்மை |
|---|---|---|
| 1 | நிர்வாகம் மேல்நிலைப் பணியாகும். | மேலாண்மை கீழ்நிலைப் பணியாகும். |
| 2 | நிர்வாகப் பணி உரிமையாளர்களால் மேற்கொள்ளப்படுகிறது. | இப்பணி உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்களால் மேற்கொள்ளப்படுகிறது. |
| 3 | நிர்வாகம் மேலாண்மையின் ஒரு பகுதியாகும். இது திட்டப்படி வளர்ச்சி நடவடிக்கைகளை மதிப்பிட்டுக் கட்டுப்படுத்துகிறது. | இது ஒரு முழுப் பணியாகும். இது திட்டத்தைச் சிறப்பாக செயல்படுத்துவதில் ஈடுபடுகிறது. |
| 4 | நிர்வாகம், நிறுவனத்தின் நோக்கம், கொள்கைகள் போன்றவற்றை தீர்மானித்தல், அவ்வப்பொழுது பலதரப்பட்ட தேவையான தீர்மானங்களை எடுத்தல் ஆகியவற்றில் ஈடுபடுகின்றது. | இது, தீர்மானங்களைச் செயல்படுத்தி நிர்வாகத்தால் தீர்மானிக்கப்பட்ட கொள்கைகளையும், நோக்கங்களையும் செயல்படுத்துவதில் ஈடுபடுகின்றது. |

| | | |
|---|---|---|
| 4 | இங்கு, தீர்மானம் எடுத்தல், புறக்காரணிகளான, பொதுக் கருத்து அரசுக் கொள்கை, சமுகம், பொருளாதாரம், மதம் போன்றவற்றைச் சார்ந்துள்ளது. | இங்கு, தீர்மானம் எடுத்தலானது, அகக் காரணிகளான, மேலாளரின் கொள்கை, கருத்து நம்பிக்கை போன்றவற்றைச் சார்ந்துள்ளது. |
| 5 | இதில், உரிமையாளர்கள் ஈடுபடுவதால், அவர்களின் மூலதனத்திற்குரிய இலாபத்தைப் பெறுகின்றனர். | இதில், பணியாளர்கள் ஈடுபடுவதால், அவர்கள் செய்த பணிகளுக்கேற்ற ஊதியத்தைப் பெறுகின்றனர். |

பல நிபுணர்குழு வணிக நிர்வாகத்திற்கும், வணிக மேலாண்மைக்கும் கீழ்கண்ட விதமாக வேறுபட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளனர். அதாவது திட்டங்களை தீட்டுதலும் அவற்றை ஒன்றிணைத்தலும் நிர்வாகம் ஆகும். திட்டங்களை செயற்படுத்துதல், அமைப்பை உபயோகப்படுத்துதல் மேலாண்மையாகும்.

தீர்மானித்தல் என்பது நிர்வாகப் பணியாகும். முடிவுகளை செயற்படுத்துதல் மேலாண்மை பணியாகும். மேற்கண்ட கருத்தை சார்ஜெண்ட், ஃபுளோரேன்ஸ் மற்றும் ஸ்பீரிகால் என்பவர்களும் இக்கருத்தை ஆமோதித்துள்ளனர்.

### *நிர்வாகப் பணிகள்*

நிர்வாகப் பணிகளானது தனித்து நின்று செய்ய இயலாதது அவற்றை மேலாண்மைப் பணிகளுடன் இணைக்கப்பட்டு செயலாற்றப்பட வேண்டியவைகள்.

***1. ஆணைகளை அளித்தல்*** (Issuing of Orders)*:*

கீழ்ப் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் ஆணைகள் நியாயமானதாகவும், முழுமையானதாகவும், தெளிவானதாகவும் இருத்தல் வேண்டும். இது எழுத்து வடிவில் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் தவறாகப் புரிந்துகொள்தலைத் தவிர்க்க முடியும்.

***2. கீழ்ப்பணியாளர்களுக்கு போதித்தல், வழிகாட்டுதல் மற்றும் அறிவுரை வழங்குதல்*** (Teaching, Instructing, Guilding and Counselling the Subordinates)*:*

சரியான முறையில் பணிகளைச் செய்ய உதவும் வகையில் மேலாளர், கீழ்ப் பணியாளர்களுக்கு போதித்தல், வழிகாட்டுதல் மற்றும் அறிவுரை வழங்குதல் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும். இது அவர்களின் பணியை திறமையாகவும், ஆற்றலோடும் செய்ய வழி வகுக்கிறது.

***3. கீழ்ப் பணியாளர்களின் வேலையை மேற்பார்வையிடுதல்*** (Supervising the Work of Subordinates)*:*

கீழ்ப் பணியாளர்களின் ஒவ்வொரு வேலையும், மேலாளரால் மேற்பார்வையிடப்பட வேண்டும். மேலாளர், கீழ்ப் பணியாளர்களின் வேலை, திட்டத்தை ஒத்திருக்கிறது என்பதை உறுதி செய்யவேண்டும்.

***4. கீழ்ப் பணியாளர்களுக்கு செயலூக்கம் அளித்தல்*** (Motivating the Employees)*:*

மேலதிகாரிகளின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் வகையில் கீழ்ப் பணியாளர்களுக்கு செயலூக்கம் அளிப்பது என்பது இயக்குதலின் இன்னொரு கூறாகும்.

**5. ஒழுங்குமுறையை நிலைநிறுத்துதல் (Maintaining Discipline):**

ஒழுங்குமுறையை நிலைநிறுத்துதலும், திறமையான பணி நிறைவேற்றத்தை அளித்தலுமே இயக்குதலின் மற்றொரு கூறாகும்.

**6. கலந்துபேசி இயக்குதல் (Consultative Direction):**

எந்தவொரு ஆணையையும் அளிக்கும் முன்பு, அவ்வாணைகளை நிறைவேற்றும் கடமையுள்ள நபர்களுடன், அவ்வாணைகளின் வேலை செய்யும் தன்மை, செய்யத்தக்க தன்மை மற்றும் முடிவுகளை நன்முறையில் அடையும் தன்மை ஆகியவை தொடர்பாக கலந்து பேச வேண்டும்.

### திறன் மிக்க நிர்வாகம்

1. மிகச்சிறந்த திட்டமிடுதல்
2. தெளிவான முடிவெடுத்தல் அல்லது தீர்மானித்தல்.
3. எளிய வகையில் தகவல் தருதல்.
4. மனவுறுதி
5. விடாமுயற்சி
6. கடும் உழைப்பு
7. நல்ல அணுகுமுறை
8. உணர்ச்சிகளை கையாளும் முறை
9. குழுவினர்களை அரவணைக்கும் முறை
10. தன்னம்பிக்கை
11. வெற்றியை நோக்கிய இலக்கு
12. உண்மை தன்மை

### வான்புகழ் வள்ளுவமும் வணிக நிர்வாகமும் - ஒப்பீடு.

இன்றைய விஞ்ஞான ரீதியான நிர்வாகம் (Scientific Administration) என்பது பல்வேறு நிலைகளிலும் நம் அன்றாட வாழ்விலும், பழகும் வகைகளிலும், பணியாளர்களை நிர்வாகம் செய்வதிலும், அலுவலக நிர்வாகம் செய்வதிலும், அரசியல் நிர்வாகம் செய்வதிலும், அரசாங்க நிர்வாகம் செய்வதிலும், நிறுவனம் நிர்வாகம் செய்வதிலும், கூட்டுறவு சங்கம் நிர்வாகம் செய்வதிலும் இப்படி அடுக்குத் தொடர்களாய் தொடர்ந்து நம்முடைய ஒவ்வொரு செயற்பாடுகளிலும் இரண்டறக் கலந்த ஒன்றாக சேர்ந்து வெற்றி பெற ஏற்புடையதாக விளங்கும் இன்றியமையாதது.

இந்த நிர்வாகம் வெற்றி தர வேண்டும் எனில்…

### திட்டம்

எதை, யார், எதற்காக, எப்படி, ஏன் செய்ய வேண்டும் என்ற கேள்வி கேட்பனவற்றிற்கு மிகச் சரியான பதில் சொல்லும் அளவுக்கு திட்டமிடல் செய்ய வேண்டும்.

### முடிவெடுத்தல்

விரைவாகவும் தெளிவாகவும் மிகச் சிறந்த முடிவுகளை சிக்கனமான செலவில் இலக்குகளை அடையப்படக் கூடிய வகையில் முடிவு அமைந்திட வேண்டும்.

### தகவல்கள் தொடர்பு

மிக எளிய வழிகளிலும் மொழி சார்ந்த தகவல்களை உடனுக்குடன் தரவும் பெறவும் வேண்டும்.

### மனவுறுதி

உறுதியிலும் மிகுதியாக தகுதி வாய்ந்த தேக்கு மரம் போன்ற மனவுறுதியுடன் விளங்க வேண்டும்.

### விடாமுயற்சி

இன்னல்களைக் கண்டு துவளாமல் மின்னல் வேகத்தில் நோக்கங்களை நோக்கியே முயற்சிகள் தொடரப்பட வேண்டும்.

### கடும் உழைப்பு

உழைப்பு எல்லோராலும் இடப்படுவதென்பது ஒன்று. இலக்கை அடைய மிகக் கடுமையாக உழைத்திடுவது நிர்வாகம் செய்பவர்கள் செய்திட வேண்டும்.

**நல்ல அணுகுமுறை**

நட்பு ரீதியாகவும் ஆசிரியர் மாணவர்களுக்கு கல்வி புகட்டும் அளவிலும் நல்ல வழிகாட்டியாகவும் நல்ல குணநலன்கள் கூடிய வகையில் அணுகுமுறை கையாள வேண்டும்.

**உணர்ச்சிகளை கையாளும் முறை**

நிர்வாக அலுவலர் எல்லா நிலைகளிலும் அழுத்தம் பெறுபவர்களாகவே சூழலால் சூழப்பட்டவர்களாகிறார்கள். ஆனால் எல்லா நிலைகளிலும் சமநிலைக்கான குணநலன்களை அமைத்துகொள்ள அவர்கள் தங்களைத் தாங்களே செ துக்கிக்கொள்ள வேண்டும்.

**தன்னம்பிக்கை**

மிகவும் நெருக்கடி நிலை ஏற்படும்போது கூட அவநம்பிக்கை என்கிற இடத்தில் வைத்துப் பார்க்கவே இடமளிக்க கூடாது இந்த நிர்வாகிகள். தன் கீழ் பணிபுரியும் பணியாளர்களை உற்சாகம் அடையச் செய்துகொண்டு தன்னை தானே உற்சாகம் செய்துகொள்ள வேண்டும் நிர்வாகிகள். அதுவே குழுவின் தலைவராக வெற்றி பெற வைத்திடும் தாரக மந்திரம்.

**இலக்கு**

இலக்கு வெற்றி பெற்றுத்தரும் வகையில் பல வகைகளிலும் வடிவம் கொண்டதாக அனுமதிக்கப்படுத்துதல் வேண்டும். அது அப்படியே அடையப்பட வேண்டும்.

**உண்மைத் தன்மை**

போலியான தன்மை அகற்றப்படுத்துதல் வேண்டும். யாரிடமும் சாதகபாதகமின்றி, பாகுபாடு வேறுபாடு இன்றி, மெய்யான தன்னை பொய்யன்றி புடமிட்ட பொன் போன்ற அழகுறும் அளவில் மெழுகு தன்னை மறந்து, மற்றவர்களுக்கு வெளிச்சம் போட்டு தன்னை மறந்து வெற்றி வெற்றி என்றே அடையப்படுதல் வேண்டும்.

**நிறைவுரை**

ஆக "வான்புகழ் வள்ளுவமும் வணிக நிர்வாகமும்" ஒப்பிட்டு பார்க்கிற போது எந்த விதத்தில் கருத்துகள் தெளிவுறுகிறது எனில்.....

**"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல்
அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி"**

***(குறள் - 118)***

என்ற குறளை மட்டும் கருத்தறிந்து பார்க்கையில் குறள் சொல்கிற பொருளானது "நேராக நின்று சரியான எடை காட்டும் தராசின் முள்ளைப் போல் நடுநிலையோடு வாழ்வதே சான்றோர்க்கு அழகாகும்."

இக்குறளின் ஆதாரம் கொண்டு மேற்கண்ட வணிக நிர்வாகம் சார்பில் இயங்கும் அலுவலர்கள் எந்தவித பாரபட்சம் இல்லாமலும் விருப்பு வெறுப்புகளின்றி பாகுபாடுகளை களைந்து அந்த குறிப்பிட்ட அமைப்பினுடைய ஒட்டுமொத்த குறிக்கோள்தனை மட்டுமே நோக்கி இருத்தல் அவசியம். அதை அடைந்தே தீர வேண்டும் என்பதில் ஐயமில்லாமல் நிர்வாகம் தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வருதல் அத்தியாவசியம் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த உச்ச நோக்கமும் சரியாகவே தெளிவாகிறது.